அருகில் வைப்பாற்றிற்குக் குறுக்கே அணை கட்டுவதற்காக அரசால் ஒப்பளிக்கப்பட்ட பணிக்கு ரூ. 22.26 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டது. ஆக ரூ. 32 லட்சத்திற்கு மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்காண்டுள்ள விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை.

பாலவநத்தம் கிராமத்துக்கு ஏரி

*235 வினு.—திரு. க. சுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சா தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், பாலவநத்தம் கிராமத்தில் ஊருக்குக் கிழக்கே புதிதாகக் கண்மாய் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், பாலவநந்தம் கிராமத்தருகில் ரூ. 2.65 லட்சம் செலவில் கண்மாய் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

சோலையாறு அணை

*236 வினு.—திரு. இ. ராமசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோலையாறு அணையின் உயரம், அகலம், நீளம் எத்தனை அடி?

(இ) அந்த அணையில் எத்தனை கன அடி தண்ணீர் தேக்க முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். சாதிக் பாட்சா: (அ) சோலையாறு கல்லணையின் உயரம் 345 அடி, அகலம் 268 அடி, நீளம் 1,132 அடி.

சோலையாறு மண்ணணையின் உயரம் 235 அடி, அகலம் 820 அடி, நீளம் 2,950 அடி. இரு அணைகளின் மொத்த நீளம் 4,082 அடி.

(இ) சோலையாறு அணையின் மொத்த கொள்ளளவு 5,540 மில்லியன் கன அடியாகும்.

திரு. இ. ராமசாமி: இந்த அணையில் தேக்கப்பட்டிருக்கிற தண்ணீர் எந்தெந்த மின்நிலையங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது? அப்படி மின்நிலையங்களுக்குப் பயன்படுத்தப்பட்டதுபோக மீதியிருப்பதை பொள்ளாச்சி வட்டமல்லாமல் வேறு எந்தெந்த வட்டங்களுக்கு எவ்வளவு ஏக்கர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சோலையாறு பவர் ஹவுஸ் 1 ஆன்ட் 2. எந்தெந்தப் பகுதிகளுக்கு, எவ்வளவு ஏக்கர்களுக்கு என்று முடிவு இன்னும் செய்யப்படவில்லை.

வேளாண்மைத் துறைச் சீரமைப்பு

*237 வினு.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய இலாக்கா திருத்தி அமைக்கப்படவிருக்கிறதா?

1971 டிசம்பர் 10]

(இ) ஆம் எனில், வருடா வருடம் விவசாயத் துறையில் பட்டம் பெறுகின்ற ஏறத்தாழ 250 (இருநூற்றி ஐம்பது) பேர்களுக்கு காலப்போக்கில் வேலை வாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம். இது பரிசிலனையில் இருந்துவருகிறது.

(இ) தற்போது, இம்மாநிலத்தில் வேளாண்மைப் பட்டதாரிகளிடையே வேலையில்லாப் பிரச்சினை இல்லை. வேளாண்மைக் கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று அவ்வப்போது வரும் வேளாண்மைப் பட்டதாரிகள் வேளாண்மைத் திட்டங்களில், பணியில் அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. என். மருதாசலம் : இந்த 250 பேர்களில் எவ்வளவு பேர்கள் பட்டம் பெற்றவர்கள் ? எவ்வளவு பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது ? அதில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எவ்வளவு பேர்கள் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பட்டம் பெற்றவர்கள் 241, பட்டம் பெருதவர்கள் 9 பேர்கள். ஆனால் 250 பேர்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு, எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சொல்கிறேன்.

வாடிப்பட்டியில் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு விடுதி

*238 **வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், வாடிப்பட்டியில் பின்தங்கிய மாணவர் விடுதி அமைக்கும் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : டி. வாடிப்பட்டியில், பின்தங்கிய மாணவர்களுக்கான உணவு விடுதி 1972-73-ம் ஆண்டில் ஆரம்பிக்கும் யோசனை அரசின் பரிசிலனையில் உள்ளது.

கடல் அலைகளிலிருந்து மின் சக்தி

* 239 **வினா.—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடல் அலைகளில் இருந்து மின்சாரம் எடுக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

சந்தன 'அத்தர்' உற்பத்தி

* 240 **வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு தரப்பில் புதிதாக சந்தன அத்தர் தொழிற்சாலைகளை துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?